SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை

மாசி, 2014

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

18/3A Anai Road
Kaneshapuram
0772242401



# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## கல்விமேம்பாடு தொடர்பான கலந்துரையாடல்

01.02.2012 சனிக்கிழமை அன்று எமது அலுவலகத்தில்யாழ் மாவட்டத்திலுள்ள கல்வியாளர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் கல்வித்துறையின் செயற்பாடுகள் மற்றும் இத்துறையில் மேம்படுத்தப்பட வேண்டியவிடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் பங்குபற்றுனர்களிடமிருந்து கருத்துக்களும் அபிப்பிராயங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டது.



## IEDதிட்டக் கலந்துரையாடல்

12.02.2014 புதன் கிழமைதொடக்கம் IEDதிட்டத்தின் கீழ் கோப்பாய் பிரிவிற்குட்பட்டகிராமங்களில் **Farmers Log Book** பதிவுசெய்யும் செயற்பாடானது நடைபெற்றுவருகின்றது. இதில் தெரிவுசெய்யப்பட்ட மருதனாமடத்தில் அமைந்துள்ள விவசாய கல்லூரி **Diploma** மாணவர்களும் ஈடுபட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

SOND

## சேதனவிவசாயம் தொடர்பானகலந்துரையாடல்

05.02.2014ல் யாழ்ப்பாணவிவசாயகல்லூரியில் விவசாயசான்றிதழ் கற்கைநெறியை பின்பற்றும் மாணவர்கள், விரிவுரையாளர்கள், அதிபருடன் சேதனவிவசாயப் பண்ணை தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.



SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

### எதிர்காலத்தில் சிறந்த சூழலைஉருவாக்கிக்கொள்வதற்குஉகந்தசமூகத்தினைகட்டியெழுப்புதல் .(Create a conducive Society for Good Environment for the Future).

மேற்படி திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்டத்திலும்,அம்பாரை மாவட்டத்திலும் நடைமுறைப் படுத்துவதற்கு டயக்கோனியாநிறுவனம் அனுசரணை வழங்குகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைவடக்கு,ஆரையம்பதி, பட்டிப்பளை ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளில் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

### காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும்(Climate Change & Environmental protection )

மட்டக்களப்பு நகரசபை,ஆரையம்பதி பிரதேச சபை ஆகியஅரச அமைப்புக்களுடன் இணைந்துவீதியின் நடுப்பகுதியில் ஆரையம்பதிமுதல் ஊறணிச் சந்திவரை 130 மரங்களையும்,ஊறணிச் சந்திமுதல் பிள்ளையாரடிவரையாக 50 மரங்களில் 45 மரங்கள் பராமரிக்கப்பட்டுவருகின்றது.

09.02.2014 ம் திகதியும் 09 மரங்கள் நடுகைசெய்யப்பட்டு கூடுகள் பதிக்கப்பட்டுகொங்கிறீட் இடப்பட்டுள்ளது.ஊறணிச் சந்தியில் பிள்ளையாரடிவரையாக இருமருங்கிலும் நடப்பட்டமரங்களில் பெரும் பாலானவைவளர்ந்தநிலையில் காணப்படுகின்றது.





# Daikonia திட்டத்தின் களவிஜயம்

2014.02.12-13 அன்றுடயக்கோனியாநிறுவனத்தின் அனுசரணையில் சொண்ட் நிறுவனத்தினால் 2013 ம் ஆண்டுஅமுல்படுத்தப்பட்டதிட்டங்களின் மாற்றங்கள் களவிஜயத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டது. இதில் டயக்கோனியாநிறுவனத்தின் உத்தியோகத்தர் இவாஞ்சலிஅவர்கள் கலந்துகொண்டார்.

பார்வையிடப்பட்ட இடங்கள்.

1. கல்லடிசக்தி வித்தியாலம்
2. ஆரையம்பதிபுதிய மரநடுகையும் ஆரையம்பதி பிரதேச சபை செயலாளருடனான சந்திப்பும்
3. ஆரையம்பதிகிழக்கு -2 மாதர் அபிவிருத்திசங்கம்
4. மண்முனை தென்மேற்குபிரதேச செயலாளர், பிரதேசசெயலக அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்,மற்றும் மாவட்டஅனர்த்த முகாமைத்துவ கள இணைப்பாளர் ஆகியோருடனானசந்திப்பும்.
5. பண்டாரியா வெளிகிராமமட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவினரை சந்தித்தல்.

# SOND அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

**Diakoniaஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கள விஜயம்**

**Diakoniaஅமைப்பின் நிதிஅனுசரனையுடன் அக்கரைப்பற்றுSONDஅமைப்பினால் அமுல்ப்படுத்தப்பட்டுவரும் “Create a Conducive Society for Good Environment for the Future” திட்டத்தின் செயற்பாடுகளைஅவ்வமைப்பின் திரு. முருகவேள்,திருமதி இவாஞ்சலிஆகியோர் 2014.02.07 ம் திகதியன்றுபார்வையிட்டனர். தங்கவேலாயுதபுரம் விவசாயப் பண்ணை,கண்ணகிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள Compose Fertilizer Demonstration plots மற்றும் பட்டிமேடுகோவிலில் நடுகைசெய்யப்பட்டுள்ள மரக்கன்றுகள் ஆகியவை களவிஜயத்தின் மூலம் பார்வையிடப்பட்டது.**





## முன்மாதிரி பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினைமக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறைமாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசசெயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SONDஅமைப்பினால் 11ஏக்கர் விவசாயப் பண்ணையானதுசெயற்படுத்தப்பட்டுவருகின்றது. நிலம் பண்படுத்தல் நீர்வசதியினைஏற்படுத்தல் (Tube well), கூட்டுப் பசளைதயாரித்தல் போன்றவேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





SOND

# நிதியின்றியசெயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அதுநிதியோடுதான் செயற்படும் என்றமாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினைமாற்றி நிதியின்றிசிலரின் நேரத்தையும் எமதுவளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்குநல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினைமையமாகக் கொண்டுகடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போதுவரைசிறுவர் செயற்திட்டம் எமதுஅமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு,அக்கரைப்பற்றுபிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்டதமிழ் , முஸ்லீம்,சிங்கள இனத்தினைச் சேர்ந்த 11 ஆண், 19 பெண் உள்ளடங்கலாக 30 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

இம் மாதம் சிறுவர்களினால் மூன்று நடமாடும் நூலகசேவைமேற்கொள்ளப்பட்டது. இதில் 350 புத்தகங்கள் மக்களுக்குவாசிப்பதற்காகவழங்கப்பட்டுள்ளது.

## SONDஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

சிறுவர்களின் ஒய்வுநேரங்களைபயனுள்ளவழியில் கழிக்கும் வகையில் வாராந்தகலந்துரையாடலின் முடிவின் போதுசிறுவர்கள் விளையாடுவதற்காககரம்வொட்,கிரிக்கெட்பட்,ஸ்பிங்ஆகிய மூன்றுவகையானவிளையாட்டுப்பொருட்கள் 11 தடவைகள் வழங்கப்பட்டது.





SOND

## இளையோர் கலந்துரையாடல்

இளையோர் கலைநிகழ்வு நடாத்துவது தொடர்பானதிட்டமிடல் செயற்திட்டக் கலந்துரையாடலானது 2014.02.10 ம் திகதிசொண்ட் அலுவலகத்தில் பணியாளர் நிசாந்தியினால் நடாத்தப்பட்டது. இதில் 09 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.

## பணியாளர் கலந்துரையாடல்

அக்கரைப்பற்று **SOND** அலுவலகத்தில் நடைபெறவிருக்கு **Capacity assessment** ற்கான ஆயத்ததிட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல் நிறைவேற்றுப்பணிப்பாளரால் நடாத்தப்பட்டது. இதில் எமதுஅலுவலகத்தின் சார்பில் 6 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.





SOND

## Capacity assessment

SOND அமைப்பின் இயலாற்றலை மதிப்பிடும் நோக்கில் Diakonia அமைப்பின் ஏற்பாட்டில் MDF நிறுவனத்தினால் அக்கரைப்பற்று SOND அமைப்பானது2014.02.21,22 ம் திகதிகளில் MDF நிறுவனததின் திருபெனடிக்,திரு கஜந்தன் ஆகியோரால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டது.





## வளநிலையப் பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனைஅதிகரிக்கும் பொருட்டுஎமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர்,நிறுவனப் பணியாளர்கள்,SONDபணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 11 தலைப்பில் 368 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.





## தொலைநோக்கு

### “புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.